அவர் கூறியதாவது:

கூடலூர் பள்ளியில் 9 ம் வகுப்பு படிக்கும் போது, இளம் மாணவர் விஞ்ஞானிகளுக்கான பயிற்சி முகாம் மூலமாக அறிவியல் பயணத்தை துவங்கினேன். 2011 ல் ஜெய்ப்பூரில் நடந்த தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் எனது ஆய்வுக் கட்டுரை இடம் பெற்றது. கல்லூரியில் படிக்கும் போது பஞ்சாப் மாநிலத்தில் தேசிய அளவில் நடந்த மாணவர்களுக்கான இயற்பியல் கருத்தரங்கில் பங்கேற்றேன். அதனைத் தொடர்ந்து 2014 ல் மும்பை பாபா அணு ஆய்வு மையத்தால் நடத்தப்பட்ட தேசிய இயற்பியல் ஆய்வு முகாமில் தமிழகத்தின் சார்பாக தேர்வானேன்.

2015 ல் இளைஞர்களை கவுரவிக்கும் வகையில் இங்கிலாந்தின் அரச குடும்பத்தால் வழங்கப்படும் சர்வதேச இளைஞர்களுக்கான கோமகன் விருதைப் பெற்றேன். அதே ஆண்டு கொடைக்கானலில் உள்ள இந்திய வான் இயற்பியல் நிறுவனத்தின் சூரியனைப் பற்றி ஆய்வில் ஈடுபட்டேன். 2016ல் இலங்கையில் நடந்த சர்வதேச கல்வியை தொலைநோக்கியின் உதவியோடு எளிமையான வகையில் பல்வேறு கிராமப் புற மாணவர்களுக்கு பயிற்சி வழங்கி வருகிறேன். கிராமத்தில் உள்ள மாணவர்களும் அறிவியலில் சாதிக்க முடியும் என்ற நிலையை விரைவில் ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது ஆசையாகும், என்றார்.

**இவரை வாழ்த்த** 94428 94508.

கேமரா அல்லது அலைபேசி கேமரா மூலம் படம் பிடித்து பார்த்தால் நேரடியாக பார்த்தது போல் தெரியும். இவரிடம் நமது புகைப்படத்தை கொடுத்தால் இரண்டு மணி நேரத்தில் அதனை பென்சில் ஓவியமாக வரைந்து விடுகிறார்.

பிரேம்குமார் கூறுகையில்: ஓவியங்களை வரைந்து வருகிறேன். கவிதைகளையும் தொகுத்து கிளாஸ் பெயின்டிங், பெயின்டிங் வரைந்து வருகின்றேன். இதனால் என் வாழ்க்கையில் ஜெயிக்க முடியும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது, என்றார். **இவரை பாராட்ட** 95789 07378.

# சமூக சிந்தனையில் குறும்படம் இயக்கும் குட்டீஸ்

**தேனி**

பள்ளி சிறுவர்கள் என்றால் கார்ட்டூன் 'டிவி' சேனல்கள் பார்த்து கொண்டிருப்பர். பொம்மைகளும், விளையாட்டு பொருட்களும் வேண்டுமென்று அடம் பிடிப்பர். இன்னும் இன்னும் எத்தனையோ சேட்டைகள் செய்வர் என்ற எண்ணம் தான் சட்டென வரும். ஆனால் 'வெப் சைட் 'உருவாக்குவது, குறும்படங்கள் இயக்குவது, புத்தகம் வெளியிடுவது என்று தங்களின் திறமைகளை பெரிய படைப்பாளிகளுக்கு நிகராக வெளிக் கொண்டு வருகின்றனர் இன்றைய தலைமுறையினர்.

இந்த வரிசையில் தேனியை சேர்ந்த இளம் படை கிளம்பியுள்ளது நம் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்துகிறது. தேனி பென்னி குவிக் நகர் திட்டச்சாலை பகுதியை சேர்ந்த பாலமுருகன் மகன் 5ம் வகுப்பு படிக்கும் மிதுன் கார்த்திக்,10, தலைமையில் பெற்றோரின் பொருளாதார உதவியில் 6 சிறுவர்கள் குறும்படங்கள் மூலம் இச்சமூகத்திற்கு பாடம் கற்பிக்கின்றனர். மிதுன் கார்த்திக், பவினேஷ், சாத்விகா, செல்வகருப்பையா, ஹரீஸ் ராகுல், திபநவுமிதா ஆகியோர் வேலம்மாள் மெட்ரிக் பள்ளியில் படிக்கின்றனர். பள்ளியில் 'இமேஜ் மையின்ஷ்' என மாணவர்களுக்கு வாரத்திற்கு ஒரு வகுப்பு கேமரா, எடிட்டிங், நடிப்பு, கதை எழுதுவது என பயிற்சி கொடுக்கின்றனர். தங்களுக்கு எப்போது வாய்ப்பு கிடைக்கும் என்று காத்துக்கொண்டிருந்தது போல மிதுன் போன்ற ஆர்வமுள்ள சிறுவர்கள் ஒரு குழுவாக இணைந்து கொண்டனர்.

இவர்கள் தயாரித்துள்ள 5 நிமிடம் ஓடும் தூய்மையை வலியுறுத்தும் குறும்படம் மாவட்ட, மாநில அளவில் பரிசுகளை பெற்று வருகிறது.' தூய்மை இந்தியா 'என்ற தலைப்பில் குப்பையை, குப்பை தொட்டியில் தான் போடவேண்டும் என்பதை இப்படம் வலியுறுத்துகிறது. மற்றொரு படம் நேரத்தை வீணாக்காமல் சரியாக பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இப்படத்திற்கான கதை, திரைக்கதை, இயக்கம், நடிப்பு, படதொகுப்பு உள்ளிட்டவைகளை சிறுவர்களே ஒன்றிணைந்து செய்கின்றனர்.

**அவர்கள் கூறுவது என்ன**

**ஆர்வம்**

**மிதுன் கார்த்திக்:** எனது தந்தை என்னை ஊக்குவித்து வருகிறார். 2 வயதில் இருந்து கேமராவை எடுத்து நானாக புகைப்படம் எடுக்க கற்றுக்கொள்ள துவங்கினேன். வருங்காலத்தில் தமிழ் திரையுலகில் நல்ல இயக்குனர் என்ற இடத்தை பிடிப்பேன். இதுமட்டுமில்லாமல் எனக்கு 'வெப் டிசைனிங்' உருவாக்குவதிலும் ஆர்வம் உண்டு. தனியாக பயிற்சி வகுப்புகளுக்கும் சென்று போட்டோ ஷாப், எடிட்டிங் உள்ளிட்டவைகளை கற்று வருகிறேன்.

**தடையில்லை**

**பவினேஷ்:** நான் அலைபேசியில் படம் எடுத்து கொண்டிருப்பேன். அதன் நீட்சியாக கேமரா நுணுக்கங்களை 'யூ' டியூப்பில் பார்த்து கற்றுக்கொண்டு வருகிறேன். எனது அக்காவுடன் கதை புத்தகங்கள் படித்து, குறும்படத்திற்கான கதைகளை தேர்வு செய்வேன். பெற்றோர் எனது கனவுகளுக்கு தடை போடுவது இல்லை. இதனால் எனது திறமையை குறும்படத்தில் மட்டுமில்லாது படிப்பிலும் காட்டி வருகிறேன்.



**பெற்றோர் என்ன சொல்கிறார்கள்**

**புரிந்து கொண்டேன்**

**மிதுன் கார்த்தி தந்தை பாலமுருகன்**

என் மகன் குழந்தையாக இருக்கும் போதே அவன் எதில் ஆர்வமாக இருக்கிறான் என்பதை புரிந்து கொண்டேன். நான் கம்ப்யூட்டரில் வேலை பார்த்து கொண்டிருக்கும் போது உற்று கவனிக்க துவங்கியவன், அவனாகவே கம்ப்யூட்டரில் அனைத்து விஷயங்களையும் கற்று கொண்டான். இதனால் அவன் சினிமா கனவிற்கு தேவையான வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்தி கொடுத்தேன்



**உறுதி**

**பவினேசின் தாயார் பவித்ரா**

நான் ஆசிரியையாக உள்ளேன். குழந்தைகளுக்கு என்னவாக ஆக வேண்டும் என்பதை பெற்றோர் முடிவு செய்யக்கூடாது. படிப்பு மற்றும் மதிப்பெண்கள் தான் முக்கியம் என்று மழுங்க செய்யக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன். தற்போது பவினேஷ் படிப்பிலும், குறும் படம் இயக்குவதிலும் முழுமையாக ஈடுபடுகிறான். இவர்கள் சமூக பொறுப்புடன் பல சாதனைகள் படைப்பார்கள் என்பதில் உறுதியாக உள்ளோம்.



**பெருமை**

**பயிற்றுனர் நிதின் பரத்**

நான் சென்னையை சேர்ந்தவன். பெரிய நகரங்களில் அனைத்து வசதிகளையும் உடைய சிறுவர்களை விட கிராமப் புறங்களில் இருந்து சிறுவர்கள் ஆர்வத்துடன் குறுகிய கால அளவில் புரிந்து கற்றுக்கொள்கின்றனர். இவர்களுக்கு குறும்படம் இயக்குவது குறித்து கற்பிப்பதில் பெருமையடைகிறேன். மிதுன் கார்த்திக் தலைமையிலான குழு விரைவில் முழுநீள திரைப்படத்தை இயக்குவார்கள் அதற்கான முழுதிறமையோடு இருக்கிறார்கள்.




பவினேஷ்

மிதுன் கார்த்திக்